செ.வெ.எண்:34 நாள்:14.12.2017

# பத்திரிக்கை செய்தி

## பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP)

மத்திய அரசால் 2017-2018ம் ஆண்டு புதிய வேலைவாய்ப்பினை உருவாக்கும் பொருட்டு பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (பிஎம்இஜிபி) என்ற திட்டம் மாவட்ட தொழில் மையம், திருநெல்வேலி மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் கருவிகள் மற்றும் இயந்திரங்கள் பொருத்தி தொடங்கப்படும் உற்பத்தி மற்றும் சேவைத் தொழிலுக்கு முறையே ரூ.25.00 இலட்சம் வரை மற்றும் ரு.10.00 இலட்சம் வரை தேசியமயமாக்கப்பட்ட வங்கியின் மூலம் கடன் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் சேவை பிரிவின் கீழ் ரூ.5.00 இலட்சம் வரையிலான திட்ட அளவிற்கும், உற்பத்தி பிரிவின் கீழ் ரூ.10.00 இலட்சம் வரையிலான திட்ட அளவிற்கும் கல்வித் தகுதி எதுவும் தேவையில்லை. ரூ.5.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டிற்கு மேலுள்ள சேவைத் தொழில் செய்ய உள்ள திட்டங்களுக்கும் ரூ.10.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டிற்கு மேல் உள்ள உற்பத்தி செய்யும் திட்டங்களுக்கும் விண்ணப்பிக்க 8-ம் வகுப்பு தேர்ச்சி அடைந்திருக்க வேண்டும்.

மேலும் இத்திட்டத்தின் கீழ் நகர்புறங்களில் பயன் பெறுபவர்களில் பொது பிரிவினர்களுக்கு 15 விழுக்காடு மானியமும், சிறப்பு பிரிவினர்களுக்கு 25

விழுக்காடு மானியமும், கிராமப்புறங்களில் பயன் பெறுபவர்களில் பொது பிரிவினர்களுக்கு 25 விழுக்காடு மானியமும், சிறப்பு பிரிவினர்களுக்கு 35 விழுக்காடும் மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் பெறப்படும் விண்ணப்பங்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையிலான தேர்வுக்குழுவினரால் தேர்வு செய்யப்பட்டு கடன் உதவி பெற வங்கிகளுக்கு பரிந்துரை செய்யப்படுகிறது. வங்கிகளின் மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்னர் தொழில்முனைவோர் பயிற்சி வழங்கப்படுகிறது.

இதற்கான விண்ணப்பங்கள் **www.kviconline.gov.in/pmegpeportal** என்ற இணையதள முகவரி வாயிலாக உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டுக்கொள்கிறார்கள். மேலும் விவரங்களுக்குக் பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம் திருநெல்வேலி அலுவலகத்தை (0462-2572162, 0462-2572384), 9944778924 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.